?????? 5 ?????????? ?????? ????

யாழ்ப்பாணத்தில் வாகன பதிவற்ற மோட்டார் சைக்கிளுடனும் ஐந்து வாள்களுடனும் ஒருவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண நகர் பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அணியினர் , வீதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்ற நவாலி பகுதியை சேர்ந்த இளைஞனை சந்தேகத்தில் வழிமறித்து சோதனையிட்டுள்ளனர் .

அதன் போது குறித்த மோட்டார் சைக்கிளுக்கு வாகன பதிவு மேற்கொள்ளப்படாது , பதிவின்றி மோட்டார் சைக்கிள் காணப்பட்டமையால் , இளைஞனை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் இளைஞனின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து வாள்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இளைஞனை தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் .

?????? ??????? ????????????????????

16 ???? ??????? ?????

ஹங்வெல்ல, எம்புல்கம பிரதேசத்தில் 16 வயதுடைய பாடசாலை மாணவியைக் கூட்டு பாலியல் வன்புனர்வு செய்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகேகெட பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 5 இளைஞர்கள் ஈடுபட்டிருந்தாகவும் அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

கூட்டு பாலியல் வன்புனர்வு செய்யப்பட்ட மாணவி நேற்றையதினம் தனது காதலனைச் சந்தித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஐந்து இளைஞர்கள், மாணவியை பலாத்தகாரமாக ஏற்றிச்சென்று ,பாழைடைந்த கட்டிடம் ஒன்றினுள் வைத்தே கூட்டுப் பாலியல் வன்புனர்வை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொஸ்கம பகுதியைச் சேர்ந்த மாணவியொருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் , சம்பவம் தொடர்பில் ஏனைய இளைஞர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தில் கூட்டு பாலியல் வன்புனர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.